மாநகராட்சி மன்றம்
20-6-1995
கிடைக்கப்பெற்றது
உரிய நடவடிக்கைக்காக

# சூழல் சுகாதார

## பிரச்சினைகளும்

## நாம் செய்ய வேண்டியவையும்

**5-6-95 இலிருந்து 11-6-95 வரை**
**அனுஷ்டிக்கப்படும் சூழல் வாரத்தை**
**யொட்டிய வெளியீடு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

எமது மக்கள் உணரும் சுகாதாரப் பிரச்சனைகள் வேறு உண்மையான சுகாதாரப் பிரச்சனைகள் வேறு

எமது பகுதியில் உள்ள சுகாதாரப் பிரச்சனை முன்னுரிமை அடிப்படையில் வெளிக்கொணர்வது, மக்களுக்கு விளங்கவைப்பது, பிரச்சனைகளை மக்கள் பங்களிப்புடன் திட்டமிட்டுத் தீர்ப்பது ஆகியவை சுகாதாரப் பிரச்சனைகளைத் தீர்க்கும் படிமுறைகளாகும்.

இந்த வகையில், எமது பகுதியில் உள்ள முன்னணிப் பிரச்சனையாகிய சூழல் சுகாதாரம் சம்பந்தமாக சில முக்கிய கருத்துக்களை வெளியிட சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் உலக சூழல் தினத்தையொட்டி வெளியிட முன்வந்தமை பாராட்டுதற்குரியது.

இதற்கான கருத்தாக்கத்திற்கு மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை உதவியுள்ளது. இந்த இரண்டு பகுதியினரின் காதலால் பிறப்பாக்கமான இந்த வெளியீடு நாட்டுக்குத் தேவையான பயன்பாட்டுக்கு நீடு நின்று வித்து இட்டு உதவும் என்பது எனது நம்பிக்கை

நன்றி

து . மகாதேவன்
சுகாதார வைத்திய அதிகாரிக்காக
மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்
மானிப்பாய்.
09-06-95

# அணிந்துரை

காலத்தின் தேவை அறிந்து இவ்வெளியீடு பிரசுரமாவதையிட்டு சந்தோஷம் அடைகிறேன். சூழல் மாசடைவதால் நீர், உணவு மாசடைய முடியும். இக்காரணத்தில் மலம், வாய்மூலம் தொற்றை ஏற்படுத்த முடியும். (FAECO ORAL POLLUTION) சூழல் மாசடைவதனால் நெருப்புக்காய்ச்சல், வயிற்றோட்டம், வயிற்றுளைவு, செங்கண்மாரி, இளம் பிள்ளைவாதம், கொலறா போன்ற நோய்கள் தீவிரமாகப் பரவமுடியும்.

எனவே கழிவு அகற்றல், மலகூட பாவனை துப்பரவான சூழலில் உணவு தயாரித்து, விநியோகம், துப்பரவான குடிநீர் பாவனை, தனிநபர் சுகாதாரம் பேணுதல் மூலம் இந்நோய்ப் பரம்பலைத் தவிர்க்க முடியும்.

எமது சூழலில் நீர்த்தேக்கம் ஏற்படுவதைத் தவிர்ப்பதன்மூலம் நுளம்பின் உற்பத்தியைத் தவிர்க்கலாம். கட்டுப்பாடற்ற நிலையில் கிருமிநாசினி தெளிக்கப்படுகிறது. போதியளவு அவகாசமின்றி காய்கறிவகைகள் சந்தைப்படுத்தப்படுகின்றன. இதன் காரணமாக நாம் உண்ணும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவில் நஞ்சுத் திரவம் சேர்பட இடமுண்டு. மருந்து தெளிப்பவர் தமது உடலில் இந்நஞ்சு உறிஞ்சப்படாநிலையில் தற்பாதுகாப்புடன் மருந்துதெளித்தல் வேண்டும்.

மக்களை விழிப்படையச்செய்யும் நோக்குடன் இப்பிரசுரம் வெளிவருகிறது.

வைத்தியகலாநிதி வை. ஸ்ரீ காந்தா
மாகாண பிரதிப் பணிப்பாளர்,
சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்
9-6-95

# ஆசி உரை

மனித வாழ்வில் முக்கிய இடத்தைப் பெறுவது சுகாதாரமாகும் அக அமைதியும் புற அமைதியும் ஏற்பட உதவும் தூண்டுகோலாக சுகாதாரம் விளங்குகின்றது. சுகாதாரத்தை தனிமனிதன் பேணி காப்பதால் மட்டும் இந்த நிலை வந்துவிடாது.

மனித சமூதாயம் கூட்டாக இயங்கி சுத்தம் சுகாதாரத்தை எப்பொழுது தீவிரமாகப் பேணுகின்றார்களோ அன்றுதான் விமோசனம் கல்வி கற்கும் பொழுதே சுகாதாரக் கல்வியும் ஊட்டுவது மிகமிக அவசியமாகின்றது.

நாம் குடியிருக்கும் வீடு, வீட்டைச் சுற்றியுள்ள இடம் யாவும் நன்கு துப்பரவாகப் பேணப்படல் வேண்டும்.
படித்தவர்கள் கூட குப்பைகளை கவனமின்றி வீசுதல், எச்சில் துப்புதல், மலசலம் கழித்தல் போன்ற விடயங்களில் மிக மோசமாக நடப்பது கண்கூடு சுகாதாரம் பேணுவதுபற்றி பொதுவான ஒருங்கிணைக்கப்பட்ட கல்வியூட்டல்முறை அமுலுக்கு கொண்டுவர வேண்டும்.

நன்நீரைப் பேணுதல், மரங்களை வெட்டாமல் விடுதல் போன்ற விடயங்களில் மேலும் விழிப்புணர்ச்சி தேவை. சிறு பிள்ளைகளுக்கு மரம் நாட்டுதல் விடயத்தில் மனதில் அழுத்தமாக பதியக்கூடிய விதத்தில் பிரசாரம் மேற்கொள்ள வேண்டும். மரங்களைத் தறிப்பதனால் சூழல் மாசுபட்டு இந்த மனித குலமே அழிந்து விடும் நிலமையை எடுத்துரைக்க வேண்டும்.

பொது வாழ்வில் நாம் கடைப்பிடிக்கும் நடவடிக்கைகள் இந்த சூழலையும் சுற்றாடலையும் பேணிப் பாதுகாக்கும் நடவடிக்கையாக அமையவேண்டிய தாற்பரியத்தை மக்களுக்கு புரியவைக்கும் இந்த கைநூல் சமூகத்திற்கு நல்ல பயனளிக்கும் என்று நம்புகிறேன்.

து. வைத்திலிங்கம்
பிரதேச செயலர்/ மேலதிக அரசாங்க அதிபர்
சண்டிலிப்பாய்
5-6-95

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழலும் சுற்றாடல் சுகாதாரமும்

## முன்னுரை

ஒருவரின் தேகநிலை, மனோநிலை, சமூகநிலை, இறையுணர்வு (ஆத்மீக) ஆகியவை முழுமையாக காணப்படும் பொழுது அவர் ஆரோக்கியமானவராகக் கருதப்படுவார்.

ஒருவர் நோயற்ற தன்மையுள்ளராகவும் பலம் உள்ளவராகவும் இருந்த போதிலும் அவரை ஆரோக்கியமான மனிதராக கருத முடியாது

ஒவ்வொரு மனிதரும் அதியுயர் ஆரோக்கியத்துடன் வாழ்வது ஒவ்வொரு மனிதனின் அடிப்படை உரிமையாகும். இனம், சமயம், அரசியல் பேதம், பொருளாதார சமூக நிலைகள் மூலம் ஒருவரின் ஆரோக்கியத்திற்கு தாக்கம் ஏற்படுத்தக்கூடாது.

ஒரு நாட்டின் சமாதானத்திற்கும் அமைதிக்கும் பாதுகாப்புக்கும் அந்நாட்டு மக்கள் எல்லோரும் ஆரோக்கியமாக இருப்பது அடிப்படையான தேவையாகும். இவ்வாறு இருப்பதற்கு மக்களும், ஆராட்சியாளரும் ஒற்றுமையாக பரஸ்பர தன்மையுடன் செயற்படுதல் வேண்டும்

## சுற்றாடல்

ஒரு மனிதனையும் சுற்றாடலையும் வேறுபடுத்த முடியாது. சுற்றாடல் மனிதனை வாழ்க்கை மேம்பாட்டுக்கு இட்டுச்செல்கிறது மனித வாழ்க்கைக்கு அடிப்படை தேவையான உணவு, உடை, இருப்பிடம் வம்ச விருத்தி ஆகியவை மேம்பட சுற்றாடல் அவசியம். மனிதனின் வாழ்க்கை முறையை நிர்ணயிக்க சுற்றாடலே துணை புரிகின்றது.

## சூழலும் நோய்த் தாக்கமும்

மனித மேம்பாட்டுக்கு சூழல் எவ்வளவு முக்கியமோ அதே போன்று சூழல் மூலம் நோய்கள் உண்டாக்கிப் பரவுவதற்கு பிரதான காரணியாக இருக்கின்றது. உதாரணமாக அருந்தும் நீர் மூலம் பல தொற்று நோய்கள் ஏற்படும். நிலத்தில் வாழும் பற்றீரியா பங்கஸ் மூலம் நிலத்தில் வாழும் கிருமிகள் மற்றும் ஊர்வன போன்ற பாம்பு, அட்டை, கௌ்ளு ஆகியவை மூலமும் ஒருவருடைய ஆரோக்கியத்திற்கு இவைகள் பாதிப்பு ஏற்படுத்துகின்றன.

## சூழலும் உறைவிடமும்

இயற்கையினால் ஏற்படும் தாக்கங்கள் வெப்பம், குளிர், மழை, காற்று, விலங்குகள். தனி மனிதனின் பாதுகாப்புக்கு தகுதியான பொருட்களை கொண்டு வீடுகள் அமைப்பதும் அதற்கு காற்று வெளிச்சம் உட்செல்லும்படி வீடு அமைத்தல் மனிதனுக்கு முக்கியமான தேவையாகும்.

## சூழலும் மனித குடியிருப்புகளும்

இயற்கை சூழலில் மனித குடியிருப்புகள் பெருவாரியாக ஏற்படுவதன் மூலம் பல தொற்று நோய்கள் உண்டாகி பரவ வாய்ப்புண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சூழலும் தொழிற்சாலைகளும்**

மக்கள் குடியிருப்புகளை அண்டிய பகுதிகளில் தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதன் மூலம் சூழலின் தன்மை மாசடைந்து பல தொற்று நோய்கள் உண்டாகி மிகத்தீவிரமாகப் பரவும். உதாரணமாக அஸ்பஸ்டஸ் சீமெந்து' வடிசாலைகள், தோற்பொருட்கள், இரசாயனத் தொழிற்சாலைகள், உரத் தொழிற்சாலைகள், என்பவற்றை குறிப்பிடலாம். தொழிற்சாலைகளில் கடமைபுரியும் தொழிலாளர்களுள் அவர்கள் அத்தொழிற்சாலையில் உபயோகிக்கும் மூலப்பொருட்கள் மூலமாகவோ அல்லது உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் மூலமாகவோ அல்லது உற்பத்தி செய்யப்பட்ட பின் ஏற்படும் கழிவுப் பொருட்கள் மூலமாகவோ நோய்கள் உண்டாகும்.

**சூழல் சுகாதாரம்;-**

சூழல் சுகாசாரம் என்பது ஓர் விஞ்ஞானமாகும். சூழலை மாற்றி அமைத்தும் கட்டுப்படுத்தியும் மனிதரின் ஆரோக்கியத்தை மேம்படுத்தவிஞ்ஞானிகள் முயன்று வருகின்றனர். இதன் அடிப்படைத் தத்துவமானது எவ்வாறு மனிதனும் சூழலும் இணைக்கப்படுகின்றது என்பதற்கான வழிவகைகளை கண்டறிந்து மனித சுகாதாரத்தை மேம்படுத்தலேயாகும். இத்திட்டத்தை அமல்படுத்துவதற்கும் முன்னெடுப்பதற்கும் சூழல் விஞ்ஞானிகள் (நிபுணர்), பொதுச் சுகாதார பொறியியலாளர், பொதுச் சுகாதார வைத்திய நிபுணர். சமூக சேவை ஊழியர்கள், சுகாதாரக்கல்வி உத்தியோகத்தர்கள் ஆகியோரின் ஒன்றிணைக்கப்பட்ட சேவைகள் மூலம் ஒரு நோயாளியிலிருந்து ஒரு சுகதேகிக்கு சூழல் மூலம் பரவாமல் தடுப்பு நடவடிக்கை எடுப்பது இக்குழுவின் பணியாகும். இக்குழுவினால் கண்டறியப்படும் சூழல் சுகாதார நோய்த்தடுப்பு வழிமுறைகள் ஏனைய பாதிக்கப்பட்ட பகுதிகளிற்கும் நடைமுறைப்படுத்த உதவியாக இருக்கும் இவ்வாறான செயற்திட்டங்கள் மூலம் சூழல் சுகாதாரம் நாட்டின் ஆரோக்கியத்தை மேம்படுத்த உதவும் சூழல் சுகாதாரத்தின் முக்கிய குறிக்கோளானது.

(1) மனிதன் தான் வாழ்கின்ற சுற்றாடல், சூழல் மூலம் நோய் வராமல் பாதுகாத்தல்

(2) மனிதன், சமூக, பொருளாதார பேதமற்ற முறையில் தன் உடல் உள. ஆத்மீக அபிவிருத்தியை மேம்படுத்தல்

**சுற்றாடல் சூழலும் நோயும்:-**

சூழலை மாற்றியமைப்பதன் மூலமும் கட்டுப்படுத்துவதன் மூலமும் நோய் வராமல் கட்டுப்படுத்தலாம்.

1. நீர் மூலம் பரவும் நோய்;- நெருப்புக்காய்ச்சல், கொலரா, செங்கண்மாரி, போலியோ, வயிற்றுளைவு.

2. மண்ணில் காணப்படும் நுண்ணங்கி;- குடற்புழு வியாதி, ஏற்புநோய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. நுளம்பு மூலம் பரவும் நோய்:- மலேரியா

மேற்கு நாடுகளிலும், அபிவிருத்தியடைந்த நாடுகளிலும் நீர் மூலம் பரவும் நோய் மிகவும் குறைந்துள்ளது ஏனெனில் அங்கு பாதுகாப்பான குடிநீர் விநியோகம், கழிவு அகற்றும் திட்டங்களும் உயர் நிலையில் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. அதே போன்று புழுவியாதிகளும் மிகக் குறைவாகக் காணப்படுவதற்கு காரணமாக சிறந்த கழிவு அகற்றும் திட்டம் அமுல் நடாத்தப்பட்டு வருவதேயாகும். முன்னர் இத்தாலி தேசத்தில் மலேரியா இருந்த போதிலும் தற்பொழுது அது முற்றாக ஒழிக்கப்பட்டுள்ளது.

## நாடளாவிய தனிமனித சுகாதாரம்

செல்வந்த நாடுகளிலும் வளர்ந்த நாடுகளிலும் தான் சுற்றாடல் சுகாதார சேவை திறம்பட செயலாற்ற முடியும் என்பது ஓர் தவறான கூற்றாகும். ஆனால் வறிய நாடுகளிலும் தனிமனித சுற்றாடல் சுகாதாரத்தை பாதுகாத்து பேணுதல் மூலம் நாடளாவிய ரீதியில் ஆரோக்கியத்தை பேணிப்பாதுகாக்க முடியும். உதாரணமாக தனிமனிதன் தன் ஆரோக்கியம், குடும்பம் ஆரோக்கியம் (வீடு) சுற்றாடல் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதன் மூலம் சமூக மேம்பாடு, கிராம மேம்பாடு, நகரமேம்பாடு அடைந்து நாடளாவிய ரீதியில் சுகநலமேம்பாட்டினை பெறமுடியும்.

## தனிமனித சுகாதாரம்

1. தேக ஆரோக்கியம்
   1. உடல்
   2. நீர்
   3. உணவு
   4. உடற் பயிற்சி
   5. சூழலுக்கேற்ப உடை பாதணி
   6. தகுதியான உறைவிடம்
   7. நோயுற்ற காலத்தின் உடன்சிகிச்சை
   8. கழிவகற்றல்
   9. இறந்த மனிதனை அகற்றல்

1. 1 உடல்:- குளித்து, தலைமயிர் பாதுகாப்பு, கை, கால், நகம், வாய், பல், உடலின் ஏனைய அங்கங்களின் பாதுகாப்பு

1. 2 நீர்:- கொதித்தாறிய நீர், குளோரின் இடப்பட்ட நீர், வடிகட்டிய நீர், போன்றவை

1. 3 உணவு:- சமபல உணவு, மாச்சத்து, புரதம், கொழுப்பு, கனியுப்புக்கள், விற்றமின்கள் ஏனையவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. 4 உடற்பயிற்சி:- இரத்தோட்டம், சுவாசம், உள்ளுறுப்பு வளர்ச்சிக்கு முக்கியம்

1. 5 சூழலுக்கேற்ப பாதணி, உடை;- வெப்ப நாடுகளுக்கு பருத்தி நூல் ஆடைகளும்.

குளிர் பிரதேசங்களுக்கு கம்பளி ஆடைகளும், அதற்கேற்ப, வெப்ப, தட்ப பாதணிகளும், உகந்தவை.

1. 6 தகுதியான உறைவிடம்;- இயற்கை, மனிதர், விலங்குகளிலிருந்து பாதுகாக்க தகுதியான உறைவிடம், நெருப்பாலும் தீப்பிடிக்காத முறையிலும் இயற்கைக்கு ஈடுகொடுக்கும் முறையிலுமான உறைவிடம்.

1. 7 நோயுள்ள காலத்தில் உடன் சிகிச்சை:- தகுதியான வைத்திய சிகிச்சை முறையும்

1. 8 கழிவகற்றல்:- 1. வேண்டத்தகாத கழிவு நீர்

2. கழிவுப்பொருட்கள் (வீடு சுற்றாடல்) இவைகள் சுகாதார முறைக்கேற்ப அகற்றப்படல் வேண்டும்.

1. 9 இறந்த மனிதனை அகற்றல்:- இதற்காக சுகாதார திணைக்களத்தினாலும் ஒதுக்கப்பட்ட இடங்களில் பிணங்களை எரித்து அல்லது புதைத்தல்

2. ஆத்மீக மேம்பாடு:- சமய விழாக்கள், சமய நிறுவனங்கள், சனசமூக நிலையம்

3. உளநல மேம்பாடு:- கல்வி மேம்பாடு, வாசிகசாலை

**வீட்டுத்தோட்டம்:-**

தனிமனிதர் சூழல் சுற்றாடல் சுகாதார சேவையில் வீட்டுத்தோட்டம் முக்கிய பங்கு வகிக்கின்றது. அதற்கு பல அடிப்படைக் காரணங்கள் உண்டு. அவையாவன

1. தனிமனிதனால் கழிக்கப்பட்ட கழிவுப்பொருட்கள் சேதன பசளையாக்கப்பட போதிய வாய்ப்புண்டு
2. இப்பொருட்கள் கொண்டு இயற்கை பசளைகளை உண்டாக்கி நிலங்களுக்கு வேண்டிய உயர் கனிப்பொருட்களை பெறமுடியும்.
3. இப்பசளைகளை பாவிப்பதன் மூலம் வீட்டுப்பாவனைக்கு வேண்டிய உணவு, காய்கறி, போன்றவற்றை உற்பத்தி செய்யமுடியும்.
4. இப்பசளையை உபயோகிப்பதன் மூலம் செயற்கை இரசாயன தாக்கமற்ற பழவகைகளை குறைந்த செலவில் உற்பத்தி செய்ய முடியும்
5. மேலும் உடன் காய்கறிகளை உற்பத்தி செய்து பயன்படுத்தமுடியும்
6. மனித சக்திக்கு வேண்டிய மிகவும் கூடிய இரும்புச்சத்தை உடைய பச்சை இலைவகைகளை உற்பத்தி செய்யமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதர் பேண வேண்டிய சுற்றாடல், சூழல் சுகாதாரம் முக்கிய அம்சமாக பின்வருவன முக்கிய பங்கு வகிக்கின்றன.

1. வீடு :-

தனிமனிதர் வீட்டை அமைக்கும் பொழுது பின்குறிப்பிட்டவை கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

அ. பாதுகாப்பான கட்டிடம்

ஆ. மேட்டுப்பாங்கான இடங்கள்;- சதுப்பு நிலம், பொதுக் கழிவுப்பொருட்களை போடும்இடம், மயானத்திற்கு அண்மையான இடம் ஆகியன. தவிர்க்கப்பட வேண்டும்.

இ. போதிய தள வசதியுள்ள கட்டிடம் (வீட்டில் உள்ளோர் தொகைக்கேற்ப தளஅளவு)

ஈ. போதிய வெளிச்சம் வீட்டினுள் செல்ல வசதி

2. நீர் வசதி;- 1. பாதுகாப்பான குடிநீர் வசதி

2. குளிக்கவும் ஏனைய வீட்டுத்தேவைக்குமான நீர் விநியோகம்

இலங்கையில் கிராமப்புறங்களில் நீர் அதிகமாக பாதுகாப்பற்ற கிணறு நீர் ஊற்றுக்கள், ஆறு. குளம் ஆகியவற்றிலிருந்து பெறப்படுகின்றது.

தனிமனிதர் சுகாதார முறையால் நீரை பெறுவதற்கு பாதுகாப்புள்ள கிணறு அமைப்பதே சிறந்த முறையாகும்.

அதில் குழாய் கிணறு முறையே தற்பொழுது சிறந்த முறையாக சிபார்சு செய்யப்படுகின்றது.

கழிவகற்றல்:—

1. மனிதனின் மலம், சலம்

2. வீட்டுக்கழிவுப் பொருட்கள்

1. மனிதனின் மலம், சலம்:-

மனிதனின் மலம், சலம் கழிவகற்றல் முறையில் இலங்கையின் தற்பொழுது பின்வரும் முறைகள் நடைமுறையில் உண்டு. அவையாவன

(அ) குழி மலசலகூடம்

(ஆ) வாளி மலசலகூடம்

(இ) இரசாயன மூலம் மலசலம் அழித்தல் (குளிர்பிரதேசங்கள்) உப்புச்சோடா

(ஈ) நீர் அடைப்பு மலசலகூடம்

(உ) செப்டிக்டாங்கி;- மூலம் பொதுத்தொகுதிக்கு கழிவகற்றல்

(ஊ) நீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. விட்டுக்கழிவுப்பொருட்கள்

வீட்டுக் கழிவுப் பொருட்கள் பின்வரும் முறையில் அகற்றப்படலாம்.

(1) எரித்தல்

(2) புதைத்தல்

(3) சேதன பசளையாக்கல்

குறிப்பு:- கழிவகற்றலின் முக்கிய நோக்கமானது இதன் மூலம் தொற்று நோய் பரவாமலும் வளி மாசடையாமலும் பேணுதலேயாகும்,

4. கழிவகற்றல்:-

கழிவு நீர் அகற்றல் தனிநபர் சுகாதாரத்திற்கு முக்கியமானதாகும். காரணம் இலையான், ஈ, நுளம்புகள் உற்பத்தியை தடுப்பதன் மூலம் நோய் பரவாமல் பாதுகாக்க முடியும். கழிவு நீர் தேங்கி நிற்பதன் மூலம் துர்நாற்றம் ஏற்படும். பார்வைக்கு அசிங்கத்தை உண்டாக்கும் உளநலத்தை பாதிக்கின்றது.

கழிவு நீர் அகற்றல் பின்வரும் முறைகளின் மூலம் நிறைவேற்றப் படலாம்.

1. கழிவு நீர் வளவுகளில் தேங்கி நிற்காதவாறு மாற்றுத்திட்டத்தின் மூலம் மாறி, மாறி நீர் வடிகால்கள் மூலம் பாச்சுவதன் மூலம் அவைகளை காயவைத்தும், சம்பூர்ணமாக வற்றவிடல்.

5. சுகாதார சேவையாளரின் வீட்டுத்தரிசிப்பும், சுகாதாரக்கல்வியும்

சுற்றாடல் சூழல் சுகாதாரம் மேம்பட சுகாதார சேவையாளரின் வீட்டுத்தரிசிப்பும், சுகாதாரக்கல்வியும் முக்கிய பங்கு வகிக்கின்றது. அவையாவன

1. வீடுகள் கட்டுவதற்கான அங்கீகாரம்

வீடுகள் கட்ட எண்ணியுள்ள இடம் பார்வையிடல், அனுமதியளித்தல் வெளிச்சம் காற்று அமைப்பு முறைகளை வலியுறுத்தல். மலசலகூடவசதி, நீர் வசதி முதலியவற்றின் அறிவுரை, கழிவகற்றல் முறை பற்றிய விளக்கம், வீட்டுத் தோட்ட முக்கியத்துவம், பொதுச் சுகாதார கல்வியை புரியக்கூடிய முறையில் போதித்தல்.

## கிராம ரீதியாக சுற்றாடல் சுகாதாரம் பேணல்

கிராம ரீதியாக சுற்றாடல், சூழல், சுகாதார மேம்பாடு அடைய பின்வரும் திட்டங்கள் முக்கியமானவையாகும்.

1. பொதுச் சுகாதார பொறியியலாளர், இரசாயன ஆராய்ச்சியாளர் வைத்திய அதிகாரிகள், பொதுச் சுகாதார உத்தியோகத்தர், கிராம மேம்பாட்டுக்கு உதவி புரியும் ஸ்தாபனங்கள் அத்துடன் ஊழியர்கள் தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. யாழ் குடா நாட்டில் பல இடங்களில் குடிநீர் வசதியின்மை, பெரு மளவு காணப்படுகின்றது. (அசாதாரணமாய் அராலி, சங்கானை, மூளாய், பொன்னாலை, நாவாந்துறை, கொழும்புத்துறை, அரியாலை போன்ற இடங்கள்) இப்படியான இடங்களுக்கு மேற்குறிப்பிட்ட உத்தியோகத்தர் ஸ்தாபனங்களின் துணை கொண்டு குடிநீர் விநியோக வசதிகள் செய்யப்படவேண்டும்.

3. கிராம ரீதியில் பொது மக்கள் அதிகமாக கூடும் இடங்களாகிய சந்தை, திருவிழாக்கள் போன்ற நிகழ்வுகளில் நீர் விநியோகம், மலசலகூட வசதி, அதன் சுற்றாடல் பாதுகாப்பு, வீதித்துப்பரவு அத்தியாவசியமாகும்.

4. மழை காலங்களில் நீர் தேங்கி நிற்காதவாறு வடிகால் அமைப்பும் அதன் பராமரிப்பும் பேணப்படல் வேண்டும்.

5. சுகாதார ஊழியர்கள் பொதுமக்களை கிராம ரீதியில் சுகாதாரக் கல்வியை மேம்படுத்த கலந்துரையாடல், கருத்தரங்கு, கண்காட்சி, படங்கள், போட்டிகள் மூலம் போதிக்க வேண்டும்

6. நவீன முறைகளைப் பயன்படுத்தி கிராம மேம்பாட்டுக்காக உதவும் அறிவு ஆலோசனைகளை பெற்று ஏற்ற முறையில் செயற்படுத்தல்.

7. சுற்றாடல், சூழல் சுகாதார மேம்பாட்டுக்கு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களை விசேட பயிற்சிக்காக அனுப்பி அதை அவர்கள் கிராம மட்டத்தில் ஆர்வமுள்ளவரின் அனுசரணையுடன் செயற்படுத்த உதவ வேண்டும். இந்நடவடிக்கைகள் தொடர் நடவடிக்கையாக இருத்தல் வேண்டும்.

8. கிராம மேம்பாட்டு திட்டங்களில் மக்களே நேரடியாகபயன்பட அவர்கட்கு வேண்டிய பயிற்சிகள் கொடுக்கப்படல் அவசியமாகும். (உதாரணமாக ஓட்டுனர், மரவேலை, இரும்பு வேலை, மேசன் வேலை, குழாய் பம்வார்த்தல், மலசலகூடக்கந்கள் செய்தல் ஏனையவை)

9. மக்கள் மரணிக்கும் போது அவர்களை புதைப்பதற்கும், எரிப்பதற்கும் இதற்கென வகுக்கப்பட்ட இடங்கள் தவிர்ந்த ஏனைய இடங்கள் தகனம் செய்வதோ புதைப்பதோ கூடாது.

குறிப்பு:- மழை நீர் தேக்கி வைப்பதன் அவசியம்

1. யாழ் மாவட்டத்தில் நீர், உப்பு நீர் செறிந்ததாக காணப்படுவதை யாவரும் அறிந்த விடயமாகும். இவ்வுப்பு நீர் உருவாவதற்கு பல காரணங்கள் இருக்கின்ற போதிலும் முக்கியமாக

   1. தோட்டபயிர்ச் செய்கைக்காக அதிகமான கிணற்றுநீர் நிலத்திலிருந்து வெளியேற்றப்படுவதனால் நீரின் தன்மை மாற்றமடைகின்றது.

இதை மாற்றுவதற்கு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. மழை காலத்தில் பெய்யும் நன்நீர்கடலிலுள் சென்றடையாது தேக்கிவைக்க வேண்டும்.

2 ஆழியவழை, செம்பியன் பற்று, தொண்டமானாறு, மூளாய் ஆனையிறவு பிரதேச குடாக்கள் நன்னீர் தேக்கமாக அமைக்க வேண்டும்.

3. யாழ் மாவட்டத்தில் உள்ள சகல கேணிகளும் புனரமைக்கப்பட வேண்டும்.

## சுற்றாடல் சூழல் மாசுபடுதல்

சுற்றாடல், சூழல் அசுத்தப்படும் பொழுது அதை மாசுபடுத்தல் என்கிறோம் சுற்றாடல் சூழல் என்பது

1. நிலம்
2. நீர்
3. காற்று
4. வெப்பம்
5. ஆகாயம் ஆகியவற்றை உள்ளடக்கும்

பொதுவாக சுற்றாடல் சூழலை பாதிக்கும் காரணிகள் :-

1 நிலம்:- அ. கிருமிநாசினி
ஆ உர வகைகள்
இ இரசாயனப் பொருட்கள்
ஈ கழிவுப் பொருட்கள்

2 நீர்:- அ. இரசாயன சேர்க்கை
ஆ கழிவுப்பொருட்கள்

3. காற்று:- அ பெற்றோலியப் பொருட்களினால் ஏற்படும் புகை
ஆ நிலக்கரி
இ. தொழிற்சாலை பாவிக்கும் எரிபொருள்
ஈ. இரசாயன வாயுக்கள்

4. வெப்பம்:- அ. அணு உலை
ஆ. காடுகள் அழித்தல்

5. ஆகாயம்:- அ. சோன் படை பாதிப்படையக் கூடிய செயற்பாடுகள்
ஆ. அணுக்கதிர்
இ. ஒலி

ஆக்கம்:- சுகாதார வைத்திய அதிகாரி, பணிமனை
(சுகாதாரக் கல்விப்பிரிவு)
மானிப்பாய்

வெளியீடு;- சூழல் பாதுகாப்பு பிரிவு
பிரதேச செயலகம்
வலிகாமம் தென்மேற்கு
சண்டிலிப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி உரை

சூழல் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை பொது மக்கள் பரந்த அடிப்படையில் அறிந்து கொள்ளும் பொருட்டு சுற்றாடல் சுகாதாரம் பற்றிய அறிவை பொதுமக்களிடையே பரப்புவதற்காகவும், சுற்றாடல் உரிய முறையில் பேணப்படாததால் ஏற்படக்கூடிய தொற்று நோய்களை தவிர்ப்பதற்காகவும், போசாக்கான உணவுகளை சிரமமின்றி பெற்றுக்கொள்ளும் பொருட்டும், சூழலும், சுற்றாடல் சுகாதாரமும் என்ற நூல் வெளிவருகிறது.

இக்கைந்நூலை எழுதுவதில் எனக்கு உதவியாக இருந்த மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை உத்தியோகத்தர்களுக்கும், முன்னுரை, அணிந்துரை, ஆசியுரை எழுதி இந் நூலைச் சிறப்பித்த அதிகாரிகளுக்கும், இந்நூலை சிறப்பாக அச்சிட்டு வெளியிட்ட பிரதேச செயலர் சண்டிலிப்பாய் அவர்கட்கும் நன்றி கூறுகிறேன்.

வைத்திய கலாநிதி நா. விவேகானந்தன்
பதில் பிராந்திய வைத்திய அதிகாரி
மலேரியா தடை இயக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org